

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.4.2026) அவரது இல்லத்தில், ரோமன் கத்தோலிக்க இறைச்சபை ஆட்சிப் பயிற்சிப் பள்ளியின் சென்னை மயிலாப்பூர் மறை மாவட்டத்தின் முன்னாள் பேராயர் ஏ.எம். சின்னப்பா, அருட்தந்தை ஆல்டோ, தென்னிந்தியத் திருச்சபையின் (CSI) ஆயர் அருட்தந்தை பவுல் பிரான்சிஸ் ரவிச்சந்திரன், பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சி.பெர்னந்தாஸ் ரத்தின ராஜா, செபாஸ்டியன், எபெனேசர், இந்திய தேசிய தேவாலயங்கள் பேரவை பொதுச் செயலாளர் (NCCI) அருட்தந்தை ஆசிர் எபெனேசர், தமிழ்நாடு ஆயர் பேரவையின் (ரோமன் கத்தோலிக்கம்) துணை பொதுச் செயலாளர் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப், அருட்தந்தை டாக்டர்.வின்சென்ட் சின்னதுரை, ஜேக்கபைட் சிரியன் ஆர்த்தடாக்ஸ் திருச்சபையின் அருட்தந்தை பேசில், ஜீசஸ் கால்ஸ் அமைப்பின் திருமதி ஸ்டெல்லா ரோமோலா பால் தினகரன், டேனியல் டேவிட்சன், ஏ.ஜி. திருச்சபையின் போதகர் ஆலன், இந்திய நற்செய்தி திருச்சபையின் (Evangelical Church of India) துணைத் தலைவர் ஆயர் கதிரோலி மாணிக்கம், தமிழ்நாடு லத்தீன் ஆயர் மாநாட்டின் பிரதிநிதி அருட்தந்தை பிரான்சிஸ் ஸ்டீபன், சிரியோமலபார் கத்தோலிக்க திருச்சபையின் அருட்தந்தை திரு. ஷெபின், இயேசு மீட்கிறார் அமைப்பின் பிரதிநிதி சகோதரர் கே.பொன் பாண்டிஇன்பரசு, சகோதரர் ஜே.ரத்தன் ராஜ், மெதடிஸ்ட் சர்ச் ஆஃப் இந்தியா மெட்ராஸ் மண்டல மாநாட்டின் பிஷப் சி.ஜி.தயானந்த், அருட்தந்தை டாக்டர் எஸ்.சி. பால் ராஜ், செல்வின் ஜெபராஜ், டெர்ரி ராக்லேண்ட், தமிழ் சுவிசேஷ லூத்தரன் தேவாலயத்தின் அருட்தந்தை பாஸ்டர் சாம்சன், இரும்புலியூர் பெந்தேகோஸ்தே மிஷனின் சகோதரர் டேவிட் பிரவீன், இம்மானுவேல் டேவிட், ஆல்வின் பிரபு, செல்வம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்ட மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்ததற்கும், சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாவலராக விளங்குவதற்கும் நன்றி தெரிவித்தனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன், வழக்கறிஞர் ரிச்சர்ட் வில்சன் ஆகியோர் உள்ளனர்.

## எத்தனை முனைப் போட்டியாக இருந்தாலும் மீண்டும்

# தி.மு.கழக கூட்டணியே மகத்தான வெற்றி பெறும்!

## “டி.டி. நெக்ஸ்ட்” ஆங்கில நாளேட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பேட்டியில் உறுதி!

**சென்னை, ஏப்.21 -**

**“எத்தனை முனைப் போட்டியாக இருந்தாலும் மீண்டும் தி.மு.கழகக் கூட்டணியே மகத்தான வெற்றி பெறும்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “டி.டி. நெக்ஸ்ட்” ஆங்கில நாளேட்டிற்கு அளித்த பேட்டியில் உறுதிபடக் கூறினார்.**

“டி.டி. நெக்ஸ்ட்” பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், தமிழகம் முழுவதும் நிலவும் வலுவான மக்கள் ஆதரவையும், ஆட்சிக்கு எதிரான மனநிலை இல்லாததையும் சுட்டிக்காட்டி, தி.மு.க. தலைமையிலான கூட்டணி தீர்க்கமான வெற்றியைப் பெறும் என்று ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டத்தின் மூலம், ஏறக்குறைய ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் ஒருவர் பயனடைந்துள்ளனர் என்று அவர் கூறினார்.

மாநிலம் முழுவதும் காணப்பட்ட உள்கட்டமைப்பு மேம்பாடு, அரசின் செயல்பாட்டைப் பிரதிபலித்தது என்று தி.மு.க. தலைவர் மேலும் கூறினார்.

“டி.டி. நெக்ஸ்ட்” ஆங்கில நாளேட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

**செய்தியாளர்:** *நீங்கள் தொடர்ந்து தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் பங்கேற்று வாக்குகளை சேகரித்து வருகிறீர்கள். தி.மு.க. கூட்டணிக்கு பொதுமக்களின் ஆதரவு எப்படி உள்ளது?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எங்களின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டின் அனைத்து தரப்பு மக்களும் எங்களது கூட்டணிக்கு மிக சிறப்பான ஆதரவை வழங்கி வருகின்றனர். திராவிட மாடல் 2.0ஆட்சி அமைவதை உறுதி செய்வது போல மக்களின் மனநிலை உள்ளது. ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியின் ஏதா வது ஒரு நலத்திட்டத்தால் பயன் அடைந்த பயனாளிகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறார்கள். எங்கள் அரசின் சாதனைகள், அனைவரையும் சென்று சேர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்கு சென்றாலும் இந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப் பட்ட கட்டடங்களையும் திட்டங்களை யும் நீங்கள் பார்க்க முடியும். ஆட்சிக்கு எதிரான மனநிலை இல்லை. மாறாக தமிழ்நாடு முழுக்க திராவிட மாடல் அரசுக்கு ஆதரவான அலைதான் வீசுகிறது என்பதால் நாங்கள் மீண்டும் ஆட்சியை அமைப்போம்.

### மக்களின் ஆதரவோடு தி.மு.க. கூட்டணி வெற்றி!

**செய்தியாளர்:** *துணை முதலமைச்சர் உதயநிதி மற்றும் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி தொகுதி வாரியாக பிரச்சாரம் செய்து வருகின்றனர். இந்தப் பிரச்சாரத்திற்கான மக்களின் எதிர்வினை எப்படி உள்ளது?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தொகுதி வாரியாக அல்ல. வாக்குச் சாவடி வாரியாக எங்கள் பிரச்சாரத்தை ஒரு ஆண்டுக்கு முன்பே நாங்கள் தொடங்கிவிட்டோம். உதயநிதி, கனிமொழி பரப்புரை மட்டுமல்ல; கழக நட்சத்திரப் பேச்சாளர்கள் உள்ளிட்ட அனைவரது பரப்புரையும் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மக்கள் திரண்டு வந்து ஆதரவளித்து வருகின்றனர். எங்களின் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் தமிழ்நாடு முழுவதும் சூறாவளியாக சுற்றி பரப்புரை மேற்கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு பரப்புரையையும் தொலைக்காட்சிகளிலும் சமூக ஊடகங்களிலும் பார்த்து வருகிறேன். ஒவ்வொருவரும் தனித்துவமாக தங்கள் பரப்புரையை மேற்கொண்டு வருகிறார்கள். மக்களின் ஆதரவை பார்க்கும் போது தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றி அடைய போவது உறுதியாகத் தெரிகிறது.

### கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஒருமுகமாக நின்று பிரச்சாரம்!

**செய்தியாளர்:** *கூட்டணிக் கட்சிகளுக்கான தொகுதி எண்ணிக்கை மற்றும் குறிப்பிட்ட தொகுதிகளைத் தீர்மானிப்பதில் சிக்கல்கள் இருந்ததாக தகவல்கள் கூறுகின்றன. இது தேர்தல் பிரச்சாரத்தையோ அல்லது முடிவுகளையோ பாதிக்குமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** அதிகமான தொகுதிகளை பெறுவதில் கூட்டணிக் கட்சிகள் ஆர்வம் காட்டுவது நியாயமான விஷயம்தான். கருத்தொற்றுமை அடிப்படையில் கூட்டணிக் கட்சிகளுடன் புரிந்துணர்வு செய்து கொண்டு தான் தொகுதிப்பங்கீடு இறுதி செய்யப்பட்டது. கடந்த 2021 தேர்தலைவிட இப்போது கூடுதலாக கட்சிகள் கூட்டணியில் இணைந்திருக்கின்றன. அதனால், கடந்த முறை போட்டியிட்ட இடங்களைவிட இந்த முறை தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் குறைவான தொகுதிகளில் போட்டியிடும் சூழல் ஏற்பட்டது. இவையெல்லாம் இயல்பாக நடந்த விஷயங்கள். இவை சிக்கல்கள் அல்ல. தேர்தல் வெற்றிக்காக வகுக்கப்பட்ட வியூகம் இது. இது தேர்தல் வெற்றியை பாதிக்காது. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒருமுகமாக களத்தில் நின்று பிரசாரம் செய்து வருவதை கண்டிருப்பீர்களே!



Welfare measures announced only after financial consultation, says Stalin

**செய்தியாளர்:** *கருத்துக் கணிப்புகள் பல்வேறு முடிவுகளை காட்டுகின்றன. களத்தில் உள்ள உண்மையான நிலைமை என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** உண்மையான கருத்துக் கணிப்புகள் தி.மு.க. மிக அதிகமான இடங்களில் வென்று ஆட்சியை தக்க வைக்கும் என சொல்லியிருக்கின்றன. மக்கள் ஏற்கெனவே தீர்மானித்து விட்டார்கள். மக்களின் பேராதரவுடன் அடுத்த மாதம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவது உறுதி.

### கூப்பன் திட்டம் எல்லா வீடுகளிலும் பேசுபொருளாகிவிட்டது!

**செய்தியாளர்:** *அரசின் திட்டங்களுக்கு பொதுமக்களின் பதில் எப்படி உள்ளது? ரூ. 8,000 கூப்பன் திட்டம் ஒரு ஆண்டுக்குள் நிறைவேற்றப் படுமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ‘சொன்னதை செய்வோம் செய்வதைதான் சொல்வோம்’ என்பது தி.மு.க.வின் தாரக மந்திரம் மட்டுமல்ல; அது மக்களின் நம்பிக்கை. எனவே எத்தனை கட்சிகளின் தேர்தல் அறிக்கை வந்தாலும் களத்தில் சூப்பர் ஸ்டாராக நிற்பது தி.மு.க. தேர்தல் அறிக்கைதான். கடந்த கால தேர்தல்களில் அது மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. திராவிட மாடல் 2.0அரசிற்கான தேர்தல் அறிக்கையை வெளியிட்டதுமுதல் ஊர் முழுக்க எங்களின் தேர்தல் அறிக்கை பற்றிய பேச்சுகள்தான் ஒலிக்கிறது. அந்த அளவு மூலை முடுக்கெல்லாம் தி.மு.க. தேர்தல் அறிக்கை வாக்குறுதிகள் சென்று சேர்ந்துள்ளன. குறிப்பாக இல்லத்தரசிகள் தங்களுக்கு தேவையான வீட்டு உபயோகப் பொருட்களை பிடித்த கடைகளில் பிடித்த பிராண்டில் தாங்களே தேர்ந்தெடுத்து வாங்கிக் கொள்ளும் வகையில் அறிவிக்க பட்டுள்ள ரூ.8000 இல்லத்தரசி கூப்பன் இன்று எல்லா வீடுகளிலும் பேசுபொருளாகி இருக்கிறது. பெண்களின் வீட்டு வேலைகளின் சுமையை குறைக்கும் நோக்கோடு இந்தத் திட்டத்தை அறிவித்துள்ளோம். பெண்கள் மட்டுமல்லாது அனைத்து தரப்பினரும் இத்திட்டத்தை வரவேற்று உள்ளனர். திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன் திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும்.

**செய்தியாளர்:** *தி.மு.க. பல திட்டங்களை செயல்படுத்தி பல சாதனைகளை எட்டியுள்ளது. அதே நேரத்தில், வெற்றியை உறுதி செய்ய 20க்கும் மேற்பட்ட கட்சிகளுடன் பெரிய கூட்டணி அமைப்பது ஏன் அவசியமாக இருந்தது?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தேர்தலில் வெற்றி பெறுவதற்கான எல்லா வியூகங்களையும் வகுக்க எல்லா கட்சிகளுக்கும் உரிமை உண்டு. ஒத்த கருத்துடைய மதச்சார்பின்மையை கடைப்பிடிக்கிற கட்சிகளை கூட்டணியில் சேர்த்து கொண்டு பயணிக்கிறோம். 2019 நாடாளுமன்றத் தேர்தல் தொடங்கி எங்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இன்று வரையில் இணைந்தே பயணிக்கின்றன. ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களால் மக்கள் பயனடைந்து வருவதைக் கண்டும், எங்கள் கூட்டணி தான் வெற்றிக்கூட்டணி என்பதை உணர்ந்தும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர்கால நலனுக்கும் திராவிட மாடல் ஆட்சிதான் தொடர வேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு புதிய கட்சிகளும் எங்களை ஆதரித்துள்ளனர். அதனால், கடந்த காலத்தைவிட அதிகமான கட்சிகள் கூட்டணியில் இடம்பெற்றுள்ளனர். வலிமையான எங்களது கூட்டணி மேலும் வலிமைசேர்ப்பதும் தேர்தல் வியூகம் தானே!

### மக்களின் வரவேற்பை பெற்ற தி.மு.க. Brand திட்டங்கள்!

**செய்தியாளர்:** *நீங்கள் செயல்படுத்திய திட்டங்களில், அதிக பொது மக்களின் பாராட்டைப் பெற்ற திட்டம்எது என்று நினைக்கிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எங்களின் எல்லா திட்டங்களும் மக்களுக்கானது. ஒவ்வொரு திட்டத்திலும் பயன் அடையும் பயனாளிகளை பொறுத்து ஒரு திட்டங்களில் வரவேற்பு கூடுதலாக இருக்கும். கலைஞர் மகளிர் உரிமை தொகை, விடியல் பயணம், மாணவர்களுக்கான காலை உணவு திட்டம்,மாணவ, மாணவிகளின் உயர்கல்வியை உறுதி செய்யும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டம், ஒவ்வொரு இளைஞரையும் போட்டித் தேர்வுக்கு தயார்ப்படுத்தும்நான் முதல்வன் என பல திட்டங்களை சொல்லலாம். இந்த திட்டங்கள் மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றிருக்கின்றன. எங்கள் திட்டங்களால் குடும்பத்தில் யாராவது ஒருவர் பயன் அடைந்திருப்பார். அது தான் எங்களுக்கு மகிழ்ச்சியை தருகிறது. அதனால் பயன் அடைந்த பயனாளிகள் சொல்லும் பாராட்டைத்தான் பெருமையாக நினைக்கிறோம்.

தி.மு.க. Brand திட்டம் என மற்றவர்களால் வர்ணிக்கப்படும்கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை அறிவிக்கும்போது அதை செயல்படுத்த முடியுமா? அதற்கான சாத்தியகூறுகள் இல்லை என்றெல்லாம் சந்தேகத்தை பலரும் எழுப்பினார்கள். ஆனால் அதை எல்லாம் முறியடித்து, வெற்றிகரமாக செயல்படுத்தி 1.31 கோடி குடும்பத்தலைவி களுக்கு மாதம் ரூ1000 உரிமை தொகை வழங்கி வருகிறோம். இந்த திட்டத்தால் பெண்களின் பொருளாதார சுதந்திரம் காக்கப்பட்டுள்ளது, குழந்தைகளின் கல்வி , மருத்துவம் உள்ளிட்ட அடிப்படை தேவைகளுக்கு அந்த தொகை உதவி வருகிறது. எதிர்கால தேவைக்காக அவர்கள் சேமித்தும் வருவதாக பெண்கள் தெரிவிக்கின்றனர். உள்ளூர் வணிகமும் இதன்மூலம் பயனடைந்து வருகிறது. எங்க அண்ணன் தரும் பணம் என சகோதரிகள் உரிமையோடு இந்த பணத்தை பயன்படுத்தி வருகின்றனர் . அந்த அளவு இந்த உரிமைத் தொகை இன்று ஒவ்வொரு குடும்பத்தின் அங்கமாக மாறிவிட்டது.

தொடர்ச்சி 10–ஆம் பக்கம்